# CANADA வாக்குகள்

2015 மத்திய அரசுத் தேர்தல் செய்திஅறிக்கை:
பிள்ளைப் பராமரிப்பு

## பிரச்சினை

பிள்ளை ஒருவரை வளர்ப்பதற்கான செலவுகளால் குடும்பத்தவர்கள் சிரமப்படுவது, "பிள்ளை ஒருவரை வளர்ப்பதற்கு முழுக் கிராமும் தேவையாகவுள்ளது", என்ற பழைய வாசகத்தை முன்னொருபோதும் இல்லாதளவுக்கு மிகவும் சரியானதாக்குகின்றது. அனேகமான வீடுகளில், வசிப்பிடச் செலவுக்கு, அடுத்த, இரண்டாவது பெரிய செலவாக பிள்ளைப் பராமரிப்புச் செலவு இருக்கின்றது. கனடாவில் பிள்ளைப் பராமரிப்பு மாதாந்தக் கட்டண இடை (median), கைக்குழந்தைகளுக்கு $761 ஆகவும், சிறிய பிள்ளைகளுக்கு (toddlers) $701 ஆகவும், பாடசாலைக்குப் போக முன்பான நிலையிலுள்ள (preschool-வயது) பிள்ளைகளுக்கு $674 ஆகவும் உள்ளது.

## நிலைமை

அதிகப்படியான செலவு என்பதற்கு மேலாக, வருமானம் எதுவாக இருந்தாலும், பிள்ளைப் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வது சிரமமானதாக இருக்கக்கூடும். 0-5 வயதுப் பிள்ளைகளுக்கான பிள்ளைப் பராமரிப்பு இடவசதியில் கால் பங்கை விடக் குறைவான இடங்களும், 0-12 வயதுப் பிள்ளைகளுக்கான பிள்ளைப் பராமரிப்பு இடவசதியில் ஐந்தில் ஒரு பங்குக்கு சற்று அதிகமான இடங்களுமே கனடாவின் ஒழுங்குவிதிமுறைக்குட்டப்பட்ட இடங்களாக உள்ளன.

தேவை இருந்தபோதும், தேசிய பிள்ளைப் பராமரிப்புத் திட்டம் எதுவும் கனடாவில் இல்லை. Universal Child Care Benefit (UCCB) எனப்படும் பண ஆதாயத்தை மத்திய அரசு பெற்றோர்களுக்கு வழங்குகின்றது. இந்த வருடத்தின் திட்டமிடப்பட்ட UCCB அதிகரிப்பைச் சேர்த்தாலும்கூட, 6 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் வருடமொன்றுக்கு $1,920ஐ மட்டுமே பெற்றோர்களுக்குக் கிடைக்கும். இது, பிள்ளைப் பராமரிப்புச் செலவின் நான்கில் ஒரு பகுதிக்குக் கூட ஈடாக மாட்டாது. தேவைக்கேற்ற போதுமான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிள்ளைப்பராமரிப்பு இடவசதி எங்களுக்கு இருக்கின்றது என்பதை உறுதிசெய்வதற்கு பண ஆதாயம்கூட எதுவும் செய்ய மாட்டாது.

கட்டுபடியாகக்கூடிய பிள்ளைப்பராமரிப்புக்குக் காத்திருப்புப் பட்டியலிலுள்ள பத்தாயிரக்கணக்கான பிள்ளைகளையும், தங்களுடைய சமூகத்தில் மிகவும் தரமான பிள்ளைப்பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்குச் சிரமப்படும் குடும்பத்தவர்களையும் பார்க்கும்போது, தேசிய பிள்ளைப் பராமரிப்பு அமைப்பு ஒன்றின் தேவை தெளிவாகவுள்ளது. நிலையான, பாதுகாப்பான, கட்டுபடியாகக்கூடிய, தரமான பிள்ளைப் பராமரிப்பைப் பெற்றோர் அணுகலாம் என்பதை உறுதிப்படுத்துவது குடும்பத்தவருக்கு ஆதரவளிப்பதுடன் பிற்கால வெற்றிக்குப் பிள்ளைகளைத் தயார்செய்கின்றது. மிகத் தரமான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிள்ளைப்பராமரிப்பு, அனைத்துக் கனேடியருக்கும் உதவிசெய்யும்.

## கேள்விகள்

1. பிள்ளைப் பராமரிப்புக்கான அதிகரித்த செலவையும் மானியப்படுத்தப்பட்ட இடவசதிக் குறைவையும் உங்களுடைய கட்சி எப்படிச் சமாளிக்கும்?

2. அனைவராலும் அணுக்கக்கூடியதொரு, தேசியரீதியான ஆரம்பக் கற்கை மற்றும் பிள்ளைப்பராமரிப்பு அமைப்பொன்றை உங்களுடைய கட்சி அறிமுகப்படுத்துமா?

## ஆதாரவளங்கள்:

**இந்தத் தொடர் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதலான தரவுத்திரட்டுத் தாள்களுக்கு:** http://spno.ca/canada-votes-2015

மாகாணரீதியான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பிள்ளைப் பராமரிப்பு இடவசதி கிடைத்த 0-12 வயதுப் பிள்ளைகளின் நூற்றுவீதம் —2012




Source: Ferns & Friendly 2012


இந்தத் தொடரைத் தயாரித்தவர்கள்: Canadian Council on Social Development, Community Development Council Durham, CommunityDevelopment Halton, Edmonton Social Planning Council, Saint John Human Development Council, Social Planning and Research Council ofBC,SocialPlanningandResearchCouncilofHamilton,SocialPlanningCouncil ofCambridgeandNorthDumfries,SocialPlanningCouncil of Kitchener-Waterloo, Social Planning Network of Ontario, & Social Planning Toronto.

மொழிபெயர்ப்பு : MCIS மொழிச்சேவைகள் – இலாபகரமற்ற அமைப்பு

www.mcislanguages.ca


தேர்தல் நாள்: ஒக்ரோபர் 19, 2015